**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | : | **9/2024** |
| | | P/W's | : | **PW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. அய்யாத்துரை | CASTE | : | |
| S/O | ராமன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | கே.புதுார் | CALLING | : | |
| TALUK | **மதுரை** | AGE | : | **66** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.07.2025**

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதியை சுமார் 50 வருடங்களுக்கு மேலாக எனக்குத்தெரியும். கருத்தக்கண்ணன் நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேசனில் வேலை பார்த்தார். வாதி எனது உறவினர். கருத்தக்கண்ணனுக்கு வாதி முதல் மனைவி என்றால் வாதிதான் அவரது ஒரே மனைவி. கருத்தக்கண்ணனுக்கும் அவரது தாய்மாமன் மகளான 1ம் பிரதிவாதியுடன் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. கருத்தக்கண்ணனுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரியல்ல.

2. மேற்படி பெண்குழந்தை பெயர் கோடீஸ்வரி என்றாலும் அவருக்கு தற்போது 39 வயதாகி திருமணம் ஆகாமல் உள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதியின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2, 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் சாட்சி அளிக்க வருமாறு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை, வாதி அழைத்ததால் வந்தேன். வழக்கின் முழு விவரம் எனக்குத்தெரியும். கருத்தக்கண்ணனின் அப்பா பெயர் நல்லகுரும்பன். கருத்தக்கண்ணன் வாடிப்பட்டியில் 20.08.2023 அன்று இறந்தார். கருத்தக்கண்ணனுக்கு வாதி மட்டும்தான் மனைவி. 1ம் பிரதிவாதி எனக்கு யார் என்று தெரியாது. 1ம் பிரதிவாதி கருத்தக்கண்ணன் மனைவி என்பதால்தான் வாதி அவரை வழக்கில் தரப்பினராக

சேர்த்துள்ளார் என்றாலும் வழக்குப்பற்றி சரியாக தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. 1ம் பிரதிவாதிக்கு கோடீஸ்வரி என்ற மகள் உள்ளார் என்றால் எனக்குத்தெரியாது. நான் வாதியின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.